தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
மார்ச் 24, 2014 இதழுடன் இணைப்பு

விண்டோஸ் எக்ஸ்பியிலிருந்து விண்டோஸ் 7

வளைந்து கொடுக்கும் டாஸ்க்பார்

இந்தியாவிற்கான கூகுள் திட்டங்கள்

விண்டோஸ் எக்ஸ்பியிலிருந்து விண்டோஸ் 7

விண்டோஸ் எக்ஸ்பிக்கான சப்போர்ட் பைல்கள் இனி கட்டாயமாக நிறுத்தப் படும் என, அதற்கான நாளை (ஏப்ரல் 8) மைக்ரோசாப்ட் அறிவித்ததிலிருந்து, பல எக்ஸ்பி வாடிக்கையாளர்கள், விண் டோஸ் 7க்கு மாறி வருகின்றனர். இந்த இரண்டு ஆப்பரேட்டிங் சிஸ்டங்களுக் கும் இடையே பல வேறுபாடுகளை அவற்றின் செயல்பாட்டில் காணலாம். இவற்றைப் புரிந்து கொண்டால், சிஸ் டம் மாறுவது எந்த பிரச்னையையும் தராது. மேலும், வேறுபாடுகளைப் புரிந்து கொள்வ தால், இயக்குவது எளிமையாகவும், கூடுதல் பலன்களைத் தருவதாகவும் அமையும்.

விண்டோஸ் 7 மற்ற ஆப்பரேட்டிங் சிஸ்டங் களிலிருந்து மாறுபாடுகள் கொண்டதாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, கடந்த 13 ஆண்டுகளாக இயக்கத்தில் இருந்த எக்ஸ்பியு டன் ஒப்பிடுகையில், அதிக வேறுபாடுகளைக் காணலாம். இருப்பினும், எக்ஸ்பிக்குப்

உள்ளே

வளைந்து கொடுக்கும் டாஸ்க்பார் பக்கம் 8

இந்தியாவிற்கான கூகுள் திட்டங்கள் பக்கம் 9

விண்டோஸ் 8.1க்கு மாறாதது ஏன்? பக்கம் 11

வாசகர்களே...

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துக்களை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளை குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல் 'சிடி'க்கள் குறித்து கம்ப்யூட்டர் மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

நூல்கள் மற்றும் 'சிடி'க்கள் 2013 செப்டம்பர் மாதத்திற்கு முன் வெளியாகியிருக்கக் கூடாது. நூல்கள் மற்றும் 'சிடி'க்களை உருவாக்கியவர், வெளியிட்டவர், கிடைக்கும் இடங்கள், விலை ஆகியவற்றைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

தினமலர் - கம்ப்யூட்டர் மலர், 39, ஒயிட்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை 600 014
computermalar@dinamalar.in

பின்னால், எந்த ஆப்பரேட்டிங் சிஸ்டத்தை நாம் மேற்கொள்ள வேண்டும் என்ற கேள்வியுடன் பார்த்தால், விண்டோஸ் 7 ஒரு பயனுள்ள சிஸ்டமாகவே இருக்கிறது. கூடுதல் பாதுகாப்பு, நவீன தொழில் நுட்பத்துடன் இணைந்த செயல்பாடு, கூடுதல் சக்தி என இதனைச் சுருக்கமாகக் கூறலாம். இவற்றைத் தரும் சில அம்சங்களை இங்கு காணலாம்.

1. டாஸ்க்பார்: விண்டோஸ் 7 சிஸ்டத்தில் கிடைக்கும் டாஸ்க் பார் விண்டோஸ் எக்ஸ்பியில் இருப்பதைக் காட்டிலும் மாறுபாடான ஒன்றாகும். எக்ஸ்பி சிஸ்டத்தில் நமக்கு குயிக் லாஞ்ச் பகுதி ("quick launch") கிடைத்தது. இதில் நமக்குத் தேவையான புரோகிராம்களுக்கான சுருக்க வழிகள் அமைக்கப்பட்டு, அவற்றில் கிளிக் செய்வதன் மூலம், மிக எளிதாக அந்த புரோகிராம்களை இயக்கத்திற்குக் கொண்டு வர முடிந்தது. இத்துடன் டாஸ்க் பாரும் கிடைத்தது. இதில் நாம் இயக்கும் புரோகிராம்கள் அவற்றின் ஐகான்கள் மூலம் நமக்குக் காட்டப்பட்டு வந்தன.

விண்டோஸ் 7 சிஸ்டத்தில், இவை ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. டாஸ்க் பாரில் உள்ள ஐகான்கள், புரோகிராம்களுக்கான சுருக்கு வழிகளையும், திறக்கப்பட்டுள்ள புரோகிராம்களையும் காட்டுவதாக உள்ளது. பார்டருடன் உள்ள ஐகான்கள், அப்போது இயங்கிக் கொண்டிருக்கும் புரோகிராம்களையும், பார்டர் இல்லாத ஐகான்கள் இன்னும் இயக்கப்படாத புரோகிராம்களுக்கான சுருக்க வழிகளாகவும் இங்கு காட்டப்படுகின்றன. இவற்றில் எந்த ஒன்றில் கிளிக் செய்தாலும், அது இயங்கிக் கொண்டிருந்தால், அந்த புரோகிராமின் விண்டோ உங்களுக்காகக் காட்டப்படும். இல்லை எனில், அது இயக்கப்படும்.

நீங்கள் திறந்து இயக்கும் புரோகிராம்கள் டாஸ்க் பாரில் காட்டப்படும். அவை மூடப்படும்போது, அவற்றிற்கான ஐகான்கள் பொதுவாக மறைந்துவிடும். அவ்வாறின்றி, புரோகிராம்களின் ஐகான்கள் எப்போதும் டாஸ்க்பாரில் காட்டப்பட வேண்டும் எனில், புரோகிராம் இயங்கிக் கொண்டிருக்கும்போது, அதன் ஐகானில் ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில் Pin this program என்பதில் கிளிக் செய்தால் போதும். இதனை அடுத்து, அந்த புரோகிராம் இயங்கினாலும், இயங்காவிட்டாலும், அதன் ஐகான் டாஸ்க் பாரில் காட்டப்படும். இவ்வாறு அமையும் புரோகிராம் ஐகான்களை, இழுத்து நாம் விரும்பும் வரிசையில் அமைத்துக் கொள்ளலாம்.

டாஸ்க் பார் ஐகான் ஒன்றில் ரைட் கிளிக் செய்கையில், அந்த புரோகிராமிற்கான பட்டியல் ஒன்று மேலெழுந்து கிடைக்கும். இதனை "jump list" என அழைக்கின்றனர். இந்த பட்டியலில், குறிப்பிட்ட புரோகிராமில் அப்போது உருவாக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்ட பைல்களும், சில பொதுவான செட்டிங்ஸ் வகைகளும் காட்டப்படும். எடுத்துக் காட்டாக, உங்கள் கம்ப்யூட்டரில் எம்.எஸ். ஆபீஸ் வேர்ட் பதிந்து இயக்கப்பட்டிருந்தால், அதன் ஐகானில் கிளிக் செய்து, அண்மையில் பயன்படுத்திய பைல்களின் பெயர்களைப் பார்த்து, தேவையான, திறந்து பயன்படுத்த விரும்பும் பைலின் மீது கிளிக் செய்து திறக்கலாம்.

இந்த டாஸ்க் பார், புரோகிராம் ஒன்றில் திறக்கப்பட்டுள்ள, ஒன்றுக்கு மேற்பட்ட விண்டோக்களை, ஒரு டாஸ்க் பார் நிகழ்வாக அமைக்கிறது. தேவைப்படும் ஐகான் மீது மவுஸின் கர்

தொழில்நுட்பம்

Windows : விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டம். இன்று உலகின் பெரும்பாலான பெர்சனல் கம்ப்யூட்டர்களில் பயன்படுத்தப்படும் ஆப்பரேட்டிங் சிஸ்டம். டாஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்திற்குப் பின் மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் வழங்கப்பட்டது. தொடர்ந்து இதில் பல வசதிகள் தரப்படுகின்றன. கிராபிக்ஸ் அடிப்படையில் இதன் யூசர் இன்டர்பேஸ் அமைக்கப்பட்டிருப்பதால் பயன்படுத்த எளிதானது.

Web Browser: (வெப் பிரவுசர்) இன்டர்நெட் பயன்பாட்டிற்கு அடிப்படைத் தேவையான இயக்கத் தொகுப்பு எனலாம். இதன் வழியே இணையத்தில் உள்ள பக்கங்களைப் பெற்று பயன்படுத்தலாம். குரோம், இன்டர்நெட் எக்ஸ்புளோரர், பயர்பாக்ஸ், ஆப்பரா போன்ற பிரவுசர்கள் இன்று பிரபலமாய்ப் பயன்படுத்தப் படுகின்றன.

சரைச் சுழற்றி வந்தால் அல்லது கிளிக் செய்தால், கிடைக்கும் பட்டியலில் இருந்து, நாம் விரும்பும் விண்டோவினைத் திறக்கலாம். இவ்வளவு வசதிகள் இருந்தும் உங்களுக்கு இந்த டாஸ்க் பாரில் விருப்பம் இல்லை என்றால், உங்கள் விருப்பப்படி இதனை மாற்றி அமைக்கவும் வசதி தரப்பட்டுள்ளது. டாஸ்க் பாரில் ரைட் கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில், Properties என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு Taskbar buttons என்பதில் கிளிக் செய்து, கிடைக்கும் கீழ் விரி மெனுவில், தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்து அமைக்கவும். Use small icons என்பதில் கிளிக் செய்தால், டாஸ்க் பார் சிறியதாக அமைக்கப்பட்டு, திரையில் உங்களுக்குச் செயல்பட அதிக இடம் கிடைக்கும்.

2. ஸ்டார்ட் மெனு: விண்டோஸ் 7 சிஸ்டத்தின் ஸ்டார்ட் மெனு, எக்ஸ்பி சிஸ்டம் தரும் ஸ்டார்ட் மெனுவில் இருந்து வேறுபட்டுள்ளது. ஆனால், இதனைப் பழக்கத்தில் கொண்டு வருவது, கடினமான செயல் இல்லை. நீங்கள் ஸ்டார்ட் பட்டனை அழுத்தும் போதோ அல்லது விண்டோஸ் கீயை அழுத்தும் போதோ, நீங்கள் அடிக்கடி பயன்படுத்தும் புரோகிராம்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைக் காணலாம். இந்த பட்டியல், அடிக்கடி தன்னை அப்டேட் செய்து கொண்டு, பயனுள்ள பல ஷார்ட்கட் வழிகளைத் தரும். உங்களின் ஷார்ட் கட் வழிகளையும் ஸ்டார்ட் மெனுவில் தோன்றும்படி அமைக்கலாம். ஷார்ட் கட் ஒன்றில் ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில் Pin to Start Menu என்பதனைத் தேர்ந்தெடுத்தால், அது ஸ்டார்ட் மெனுவில் இடம் பெறும்.

ஸ்டார்ட் மெனுவின் வலது பக்கத்தில், கண்ட்ரோல் பேனல் போன்ற பொதுவான பிரிவுகளை எளிதாக அணுகிப் பெற வழிகள் தரப்படுகின்றன. இங்கு All Programs என்பதில் கிளிக் செய்து, உங்கள் கம்ப்யூட்டரில் பதியப்பட்டுள்ள அனைத்து புரோகிராம்களின் பட்டியலைப் பெறலாம்.

புரோகிராம் அல்லது பைல் ஒன்றைத் தேடிப் பெற,ஸ்டார்ட் மெனுவில் காட்டப்படும் தேடல் கட்டத்தில், அதன் பெயரை டைப் செய்திடத் தொடங்கி எண்டர் செய்தால், அவை கிடைக்கும்.

3. யூசர் அக்கவுண்ட் கண்ட்ரோல் (User Account Control (UAC)): யூசர் அக்கவுண்ட் கண்ட்ரோல் என்ற டூல், விண்டோஸ் விஸ்டாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. விண்டோஸ் 7ல் இது மிகவும் மேம்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இந்த டூலைப் பயன்படுத்தி, குறிப்பிட்ட அனுமதியை கம்ப்யூட்டர் பயன்படுத்துபவருக்கு வழங்க முடியும். எடுத்துக் காட்டாக, புரோகிராம்களை உங்கள் கம்ப்யூட்டரில் பதிக்கும் போது, UAC கட்டளைப் புள்ளி உங்களின் அனுமதியைக் கேட்டு, அது வழங்கப் பட்ட பின்னரே, புரோகிராமினைப் பதிய அனுமதிக்கும். இது நம் கம்ப்யூட்டருக்குக் கூடுதல் பாதுகாப்பினை வழங்குகிறது. இந்த ஏற்பாடு நமக்குத் தேவையற்ற சிரமம் தராத வகையில் அமைக்கப்பட்டுள்ளது. முதலில் நம்மிடம் இந்த அனுமதியைப் பெறும் UAC கட்டளை பின்னர் அனுமதியைத் தானே வழங்குகிறது.

4. விண்டோஸ் எக்ஸ்புளோரர் (Windows Explorer): விண்டோஸ் 7 சிஸ்டத்தில் தரப்பட்டுள்ள, விண்டோஸ் எக்ஸ்புளோரர், மாறுபட்ட தோற்றத்தில் காட்சி அளித்தாலும், செயல்பாடு முந்தைய விண்டோஸ் சிஸ்டங்களில் உள்ளது போலவே இயங்குகிறது. வழக்கமான File/Edit /View மெனு இல்லாமல், இதில் கிடைக்கும் டூல் பார் வேறாகக் காட்சி தருகிறது. இருந்தாலும் மறைக்கப்பட்ட மெனுவினைக் காண, Alt+R அழுத்தினால் போதும். முன்பு விண்டோஸ் சிஸ்டம் காட்டிய File/Edit/View மெனுவும் சேர்த்து காட்டப்படும். இதே செயல் பாட்டினை இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தொகுப்பிலும் நீங்கள் காணலாம். விண்டோஸ் எக்ஸ்புளோரர் விண்டோவில், இடது பிரிவில், முக்கியமான போல்டர்களைப் பெற சுருக்கு வழிகள் தரப்படுகின்றன.

தொழில்நுட்பம்

Hard Disk : (ஹார்ட் டிஸ்க்) பைல்களைப் பதிந்து வைத்து இயக்கப் பயன்படும் ஓர் அடிப்படை சாதனம். இதில் அனைத்து வகை பைல்களையும் பதியலாம். ஆப்பரேட்டிங் சிஸ்டம் (விண்டோஸ்), அப்ளிகேஷன் சாப்ட்வேர் (எம்.எஸ்.ஆபீஸ், பேஜ்மேக்கர் போன்றவை) மற்றும் இவற்றால் உருவாக்கப்படும் பைல்கள் அனைத்தையும் இதில் பதியலாம். இதனை முறையாகவும் கவனமாக வும் கையாள வேண்டும். இது கெட்டுப் போவதைத்தான் ஹார்ட் டிஸ்க் கரப்ட் ஆகி விட்டதாகக் கூறுவார்கள். ஒரு முறை கெட்டுப் போனால் அதனை மீண்டும் சரி செய்வது சிரமமான காரியம். எனவே இதில் பதியப்படும் பைல்களுக்கு நகல் எடுத்து தனியே இதைப் போன்ற வேறு சாதனங்களில் பதிந்து வைப்பது நல்லது.

நீங்கள் இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்திடும் பைல்கள், Downloads என்ற போல்டரில், மாறா நிலையில் பதியப்பட்டுக் கிடைக்கின்றன. நீங்கள் விரும்பினால், பதிவிறக்கம் செய்யப்படும் ஒவ்வொரு முறையும், உங்களிடம் கேட்டு, நீங்கள் குறிப்பிடும் போல்டரில் பதியும் வகையில் அமைக்கலாம்.

இவற்றுடன் Libraries எனப்படும் விர்ச்சுவல் போல்டர்களும் கிடைக்கின்றன. இவற்றில், அனைத்து போல்டர்களும் காட்டப்படு கின்றன. எடுத்துக் காட்டாக, உங்கள் Documents library ல், C:\Users\NAME\Documents folder என்ற போல்டருடன், நீங்கள் இணைக்கும் அனைத்து போல்டர்களும் காட்டப்படும்.

உங்கள் தனிப்பட்ட தனி நபர் பைல்களுக்கு C:\Users\NAME என்ற போல்டர் தரப்பட்டுள்ளது. இதில் NAME என்பது, உங்களுடைய யூசர் அக்கவுண்ட் பெயர் ஆகும்.

இந்த விண்டோஸ் எக்ஸ்புளோரரில், கம்ப்யூட்டரில் உள்ள பைல்களைத் தேடுவதற்கான டூல் ஒன்றும் தரப்பட்டுள்ளது. இதற்கான கட்டத்தில் பைலின் பெயரை டைப் செய்து, பைலைத் தேடுமாறு அமைத்து தேடிப் பெறலாம். இதில் தொடர்ந்து தேடுகையில், முந்தைய தேடல்களும் நமக்குப் பட்டியல் இட்டுக் காட்டப்படும்.

விண்டோஸ் எப்போதும், உங்கள் பைல்களின் வரிசைக் குறிப்பு ஒன்றைத் (index) தயாரித்துக் கொண்டே இருக்கும். இதன் அடிப்படையில் தேடல் நடைபெறுவதால், தேடல் முடிவுகள் விரைவாகக் கிடைக்கின்றன.

5. கண்ட்ரோல் பேனல் (Control Panel): மாறா நிலையில், கண்ட்ரோல் பேனல், categories மற்றும் links ஆகியவற்றைக் காட்டுகிறது. இருப்பினும், வழக்கமான ஐகான் வகை பட்டியலைக் காண விரும்பினால், மேலாக வலது மூலையில் உள்ள View by option என்பதில் கிளிக் செய்து காணலாம். ஆனால், நீங்கள் தேடுவதைப் பெற, இந்த முயற்சி தேவையே இல்லை. இதிலும் தேடல் கட்டம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. அதில் தேவையானதை டைப் செய்திடத் தொடங்கியவுடன், பட்டியல் காட்டப்பட்டு, நமக்குத் தேவையானதைப் பெற்று செயல்பட எளிதாக வழி காட்டுகிறது.

கண்ட்ரோல் பேனல் செட்டிங்ஸ் அம்சம் ஒன்றினை, கண்ட்ரோல் பேனல் திறந்துதான் பெற வேண்டும் என்பதில்லை. ஸ்டார்ட் மெனுவில், தேடல் கட்டத்தில் நேரடியாக டைப் செய்தும் பெறலாம்.

மேலே காட்டப்பட்டிருப்பவை, கம்ப்யூட்டர் பயன்படுத்தும் ஒருவர் அடிக்கடி பயன்படுத்தும் வகைகளாகும். இன்னும் நிறைய அம்சங்களில், விண்டோஸ் 7 பல மேம்படுத்தப்பட்ட வசதிகளை, நாம் விண்டோஸ் எக்ஸ்பியில் பழகிய வகையிலேயே, ஆனால், சிறப்பானவையாகத் தருகிறது. விண்டோஸ் 7 சிஸ்டத்தினைத் தொடர்ந்து பயன்படுத்துகையில், நாம் அவற்றைப் புரிந்து கொள்வோம்.

டெக்ஸ்ட்டில் இடைக்கோடு

ஹைபன் (hyphen) எனப்படும் இடைக் கோடு, சொல் ஒன்று பிரித்து அமைக் கப்படுகையில், அதன் தொடர்பினைக் காட்டுகிறது. வேர்ட் புரோகிராம் இரண்டு வகையான ஹைபன் அமைப் பைத் தருகிறது -- தானாக அமைக்கப் படுவது மற்றும் நாமாக அமைப்பது. தானாக ஹைபன் அமைக்கப்படுவதனை நாம் தேர்ந்தெ டுத்தால், ஒரு டாகுமெண்ட்டினை முழுவது மாகத்தான் ஹைபன் அமைக்கும் வேலையை மேற்கொள்ள முடியும். ஆனால், நாமாக அமைக்கும் வகையைத் தேர்ந்தெடுத்தால், டாகுமெண்ட்டின் டெக்ஸ்ட்டில் ஒரு பகுதி யைத் தனியாகத் தேர்ந்தெடுத்தும் ஹைபன் அமைக்கலாம். குறிப்பிட்ட ஒரு பகுதியில் ஹைபன் அமைக்க வேண்டும் எனில், கீழே குறிப்பிட்டுள்ளபடி அமைக்க வேண்டும்.

1. ஹைபன் அமைக்க வேண்டிய டெக்ஸ்ட் டின் பகுதியைத் தேர்ந்தெடுக்கவும்.

2. மெனுவில் ரிப்பனில், Page Layout டேப்பி னைத் தேர்ந்தெடுக்கவும்.

3. Page Setup குரூப்பில் Hyphenation டூலைத் தேர்ந்தெடுக்கவும். அடுத்து Hyphenation Options ல் கிளிக் செய்திடுங்கள். இப்போது வேர்ட் டயலாக் பாக்ஸைக் காட்டும்.

4. இங்கு Manual என்ற பட்டனில் கிளிக் செய் திடுங்கள். உடனே, எங்கு ஹைபன் செய்திட லாம் என டெக்ஸ்ட்டின் இடம் காட்டப்படும். நீங்கள் அந்த சொல்லில், வேறு ஒரு இடத்தில் ஹைபன் அமைக்கப்பட வேண்டும் எனத் தீர் மானித்தால், அதனைச் சுட்டிக் காட்டி அமைக் கலாம். அல்லது வேர்ட் காட்டும் பல இடங் களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம். இடத் தைக் காட்டி, Yes என்பதில் கிளிக் செய்திடவும். அந்த இடத்தில் ஹைபன் வேண்டாம் என நினைத்தால், No என்பதில் கிளிக் செய்திடவும். இதே செயல்பாட்டினைத் தொடர்ந்து வேர்ட் காட்டும் டெக்ஸ்ட் இடங்களுக்கும் மேற் கொள்ளவும்.

ஏதாவது ஒரு பத்தியில் ஹைபன் இடுவது நிறுத்தப்பட வேண்டும் என நீங்கள் நினைத் தால், அந்த செயல்பாட்டிற்கும் ஏற்ப செட் செய் திடலாம். எந்த டெக்ஸ்ட் பகுதியில் ஹைபன் தேவையில்லை என்று முடிவு செய்கிறீர்களோ, அதனைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர், கீழே தந் துள்ளபடி அமைக்கவும்.

1. ரிப்பனில் ஹோம் டேப்பினைக் காட்டவும்.

2. பாரா குரூப்பில் கீழாக வலது பக்கம் காணப்



படும் சிறிய ஐகானில் கிளிக் செய்திடவும். வேர்ட் பாராகிராப் டயலாக் பாக்ஸினைக் காட்டும்.

3. அடுத்து Line and Page Breaks என்ற டேப் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதனை உறுதி செய்தி டவும்.

4. அடுத்து Don't Hyphenate என்ற பாக்ஸில் டிக் அடையாளம் அமைக்கவும்.

5. பின்னர் ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

இப்போது தானாக ஹைபன் அமைக்கும் நிலையை மேற்கொண்டாலும், எந்த பகுதிக் கெல்லாம் ஹைபன் அமைக்க வேண்டாம் என்று செட் செய்தீர்களோ, அந்த வரிகளில், பாராவில், ஹைபன் அமைக்கப்பட மாட்டாது.

தொழில்நுட்பம்

Bandwidth: இணைக்கப்பட்ட இரு வேறு சாதனங்கள் இடையே நடைபெறும் டேட்டா பரிமாற்றத்தில் அதிக பட்ச டேட்டா பரிமாற்ற வேகத்தின் அளவை இது குறிக்கிறது. இது டேட்டா பயணிக்கும் வேகம் அல்ல.

வேர்ட் டிப்ஸ்

டெக்ஸ்ட்டை மறைத்தல்

வேர்டைப் பொறுத்தவரை, பல வகைகளில், குறிப்பிட்ட டெக்ஸ்ட்டை மற்றவற்றிலிருந்து தனியே எடுப்பாக இருக்கும்படி அமைத்திடலாம். அதே வகையில் டெக்ஸ்ட்டை மறைத்தும், அவற்றைத் தனியாகக் காட்டலாம். இந்த வசதி Format மெனுவில் Font தேர்ந்தெடுத்த பின் நமக்குக் கிடைக்கிறது. இதனைப் பயன்படுத்தி சிறிய அளவில் நோட்ஸ் தயாரித்து மற்றவர்கள் அவற்றைப் படிக்காத வகையில் மறைத்து வைக்கலாம். இவ்வாறு மறைத்து வைக்கப்பட்ட டெக்ஸ்ட்டைப் பின் டாகுமெண்ட்டில் தெரியுமாறும் வைக்கலாம். இதற்கு Tools மெனு சென்று Options தேர்ந்தெடுக்க வேண்டும். பின் அதில் View மற்றும் Hidden Text தேர்ந்தெடுத்து கிளிக் செய்தால் மறைத்து வைக்கப்பட்ட டெக்ஸ்ட் தெரிய வரும். இந்த வசதியினைப் பயன்படுத்தி ஒரு



உரையாற்றுகையில் அதனை அச்சில் பெறுபவருக்கு குறிப்பு டெக்ஸ்ட்டினை மறைத்தவாறே அச்செடுத்து தரலாம்.

டெக்ஸ்ட்டை கீழாக அல்லது மேலாக அமைக்க

டாகுமெண்ட் ஒன்றில் நீங்கள் முக்கியத்துவம் காட்ட விரும்பும் சொற்களை மற்ற சொற்களிலிருந்து சற்று தூக்கியோ அல்லது இறக்கியோ காட்டுவது ஒரு ஸ்டைலாகும். இதனை வேர்ட் தொகுப்பில் எளிதாக அமைக்கலாம்.

1. எந்த சொற்களை இவ்வாறு அமைக்க வேண்டுமோ அவற்றை முதலில் தேர்ந்தெடுக்கவும்.

2.பின் இதில் ரைட் கிளிக் செய்து "Font" தேர்ந்தெடுக்கவும்.

3. "Font" என்ற பெயருடைய பல டேப்கள் உள்ள விண்டோ கிடைக்கும். இதில் "Text Effects " என்ற டேபினைத் தேர்ந்தெடுக்கவும்.

4. அடுத்து "Position" என்ற இடத்திற்கு அருகே உள்ள பல ஆப்ஷன்ஸ் உள்ள பெட்டியில் "Normal", "Raised" அல்லது "Lowered" என மூன்று ஆப்ஷன்ஸ் கிடைக்கும். நீங்கள் தேர்ந்தெடுத்த டெக்ஸ்ட் எப்படி அமைய வேண்டும் என விருப்பமோ அதனைத் தேர்ந்தெடுக்கவும்.

5. எல்லாம் முடிந்த பின் ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

வேர்டில் எண் எழுதும் முறை

வேர்ட் புரோகிராமில் டாகுமெண்ட்களை அமைக்கும் போது, எண்களை டெக்ஸ்ட்டுடன் பயன்படுத்த வேண்டியது இருந்தால், ஒற்றை இலக்கமாக இருப்பின், இலக்கத்தினை எழுத்தில் எழுதுவதே சிறந்தது. "He ate 7 biscuits" என்று எழுதுவதைக் காட்டிலும் "He ate seven biscuits," என எழுதுவதே சிறந்தது. நீங்கள் விரும்பினால், வேர்ட் மேற்கொள்ளும் இலக்கண சோதனையையும் (Grammar) இதற்கேற்ற படி மாற்றி அமைக்கலாம். இதனை மேற்கொள்ள கீழ்க்குறித்தபடி அமைக்கவும்.

1. ஆபீஸ் பட்டன் கிளிக் செய்து, அடுத்து Word Options என்பதில் கிளிக் செய்திடவும். இப்போது வேர்ட் Word Options டயலாக் பாக்ஸைக் காட்டும்.

2. இந்த டயலாக் பாக்ஸின் இடது பக்கத்தில் உள்ள Proofing என்ற ஆப்ஷனில் கிளிக் செய்திடவும்.



அடுத்து Settings பட்டனில் கிளிக் செய்திடவும். வேர்ட் Grammar Settings டயலாக் பாக்ஸைக் காட்டும். இங்கு ஆப்ஷன் பட்டியலில் கீழாகச் செல்லவும். இதில் Numbers ஆப்ஷன் வரை செல்லவும். இதில் டிக் அடையாளம் ஒன்றை ஏற்படுத்தவும்.

பின்னர் கிராமர் மற்றும் வேர்ட் ஆப்ஷன்ஸ் டயலாக் பாக்ஸ்களை மூடி வெளியேறவும்.

வளைந்து கொடுக்கும் டாஸ்க்பார்

விண்டோஸ் சிஸ்டத்தில் அதிகம் பயன்படுத்தப்படாத பிரிவுகளில் ஒன்றாக டாஸ்க் பார் இருப்பதைப் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். பெர்சனல் கம்ப்யூட்டர் பயன்பாட்டில், இதனை நம் விருப்பப்படி மாற்றி அமைத்து, ஒரு புதிய அனுபவத்துடன், விண்டோஸ் சிஸ்டத்தினை இயக்கலாம். அதற்கான இரண்டு வழிமுறைகளை இங்கு காணலாம். முதலாவதாக, திரையில் அதிக இடம் பெறும் வகையில், டாஸ்க் பாரினை மறைத்து வைத்து, தேவைப்படும் போது பெறுவது. இரண்டாவதாக, நாம் அதிகம் பிரியப்பட்டு பயன்படுத்தி வரும், விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டம் தந்த வகையில், டாஸ்க் பாரினை அமைப்பது.

டாஸ்க் பார், நமக்கு திறந்து வைத்து இயக்கும் புரோகிராம்களுக்கிடையே எளிதாகச் சென்று வர உதவும் ஒரு டூலாகப் பயன்படுகிறது. நேரத்தை அறிய உதவுகிறது. சிஸ்டம் அறிக்கைகளைக் காண வழி தருகிறது. இதற்காக, நாம் பணி செய்யும் இடமான திரையில் இடத்தை வீணடிக்க வேண்டுமா என நீங்கள் எண்ணலாம். அப்படியானால், இதனை மறைக்க முடியுமா? முடியும். அப்புறம் தேவை என்றால், என்ன செய்வது? தேவை என்றால், பெறவும் முடியும். அதற்கான வழி என்ன?

விண்டோஸ் 7 சிஸ்டத்தில், டாஸ்க் பாரினை மறைப்பதனை, ஒரு சில கிளிக் மூலம் நிறைவேற்றலாம். இன்னும் சொல்லப்போனால், அதனை அங்கு வைத்திடாமல் நீக்கிவிட்டு, தேவைப்படும்போது மீண்டும் தோன்றும்படியும் அமைக்கலாம். விண்டோஸ் 7 மற்றும் விண்டோஸ் 8 / 8.1 சிஸ்டங்களில் இதனை கீழே குறித்துள்ளவாறு செயல்பட்டு கொண்டு வரலாம்.

முதலில் டாஸ்க் பாரில் ரைட் கிளிக் செய்திடவும். பின்னர், காட்டப்படும் மெனுவில், Properties என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இங்கு முதல் முதலாகக் கிடைக்கும் Taskbar என்ற டேப்பின் கீழாக, Autohide the taskbar என்று இருக்கும் இடத்தில் உள்ள செக் பாக்ஸில் டிக் அடையாளத்தினை அமைக்கவும். தொடர்ந்து Apply மற்றும் OK கிளிக் செய்து வெளியேறவும். இந்த வேலைகளை மேற்கொள்கையில், உங்கள் டாஸ்க் பார் ஓரிரு முறை மறைந்து மீண்டும் வரலாம். இறுதியில், அது திரையின் கீழாகச் சென்று மறைந்துவிடும்.

டாஸ்க் பார் தேவை என்றால், மவுஸினை திரையின் கீழாக எடுத்துச் சென்றால், டாஸ்க் பார் மேலாக மீண்டும் வரும். விண்டோஸ் 8ல், டாஸ்க் பார் ஒளி ஊடுறுவும் நிலையில் காட்டப்படும்.



பழையபடி, தொடர்ந்து டாஸ்க் பார் காட்டப்பட வேண்டும் எனில், மேலே காட்டியபடி சென்று Autohide the taskbar என்ற இடத்தில் இருக்கும் டிக் அடையாளத்தை எடுத்துவிட வேண்டும்.

விண்டோஸ் எக்ஸ்பி டாஸ்க் பார் தான் தேவையா?

சிலர் இன்னும் விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்தில் பழகிப் போன டாஸ்க் பாரினையே வேண்டும் என விரும்புகின்றனர். இவர்களுக்கு விண்டோஸ் 7 சிஸ்டத்தில், அதனை எப்படிக் கொண்டு வருவது எனப் பார்க்கலாம். விண்டோஸ் 7 சிஸ்டத்தில், எத்தனை பைல்கள் ஒரு புரோகிராமினால் திறக்கப்பட்டிருந்தாலும், அவை அனைத்தும் ஒரு ஐகான் பட்டனில் இருக்கும். எடுத்துக்காட்டாக, நீங்கள் மூன்று வேர்ட் டாகுமெண்ட்டினைத் திறந்து இயக்கிக் கொண்டிருந்தால், அவை யாவும் ஒரு வேர்ட் ஐகான் பட்டனில் இருக்கும். மவுஸின் கர்சரைக் கொண்டு சென்றால், அவை ஒரு பட்டியலாகக் காட்டப்படும். நாம் தேவையானதைக் கிளிக் செய்திடலாம். இவ்வாறு ஒரு புரோகிராமிற்கு ஒரு பட்டன் அமைவது, நம் டாஸ்க் பாரினைத் தெளிவாக வைத்திட உதவும். ஆனால், சிலர் விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்தில் கிடைத்தது போல, ஒவ்வொரு டாகுமெண்ட்டிற்கும் ஒரு பட்டன் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள்.

புதிய விண்டோஸ் சிஸ்டங்களில் இதனைக் கொண்டு வர ஓர் எளிய வழி உள்ளது. இதற்கு டாஸ்க் பாரில் ரைட் கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில் Properties கிளிக் செய்திடவும். Taskbar டேப்பின் கீழாக Taskbar buttons செட்டிங் தேடவும். இந்த செட்டிங் வலது பக்கம் உள்ள கீழ்விரி மெனுவினைக் கிளிக் செய்திடவும். இங்கு Never combine, or Combine when taskbar is full என்பதனைக் கிளிக் செய்து தேர்ந்தெடுக்கவும். தொடர்ந்து Apply மற்றும் OK கிளிக் செய்து வெளியேறவும். இனி, எக்ஸ்பி சிஸ்டம் ஸ்டைலில், ஒவ்வொரு பைலுக்கும் ஒரு பட்டனுடன் டாஸ்க் பார் காட்சி அளிக்கும்.

இந்தியாவிற்கான கூகுள் திட்டங்கள்

இணையத்தோடு எங்கும் நிறைந்த ஒன்றாக, கூகுள் செயல்பட்டு வருகிறது. ''இதன் முழுப் பயனை இந்திய மக்கள் அனுபவித்துப் பயன் பெற வேண்டும் என்பதே எங்களின் நோக்கம்'' என தங்களின் எதிர்காலத் திட்டங்கள் குறித்துக் குறிப்பிடுகையில் கூகுள் இந்தியா பிரிவின் தலைவர் ராஜன் ஆனந்தன் தெரிவித்துள்ளார். அதிக எண்ணிக்கையில், தொடர்பில் உள்ள மக்களைக் கொண்டிருக்கும் நாடுகளின் வரிசையில் மூன்றாவது இடத்தை இந்தியா கொண்டுள்ளது. தற்போது ஸ்மார்ட் போன் முதல் இணையதளங்கள் வரை எங்கும் தன் செயல் பாட்டினை விரித்துக் கொண்டு கூகுள் செயல் பட்டு வருகிறது. இந்திய டிஜிட்டல் வெளியில், கூகுள் நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து அண்மையில் இவர் உரையாற்றினார்.

1. இணைய இணைப்பில் இன்னும் பலர்: மொபைல் போன் வழி இணைய இணைப் பினை மேற்கொள்வோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதற்கெனப் பயன்படும் ஸ்மார்ட் போன்கள் இந்த ஆண்டில் 7 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு அடுத்தபடியாக, டேப்ளட் பி.சி. க்களின் பயன்பாட்டினை மக்களிடம் அதிகரிக்கச் செய்திட வேண்டும். 2014ல் இது ஏற்படும் சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளன. ரூ.10,000 க்கும் குறைவான விலையில் டேப்ளட் பி.சி.க்கள் கிடைக்கும். அதே போல ஸ்மார்ட் போன்களும், அனைவரும் வாங்கும் விலையில் விற்பனைக்கு வரும்.

அடுத்ததாக, இந்தியர்களின் சராசரி வருமானத்தினைக் கணக்கிடுகையில், பிராட்பேண்ட் இணைப்பு, அதிக செலவிடும் இனமாகவே உள்ளது. இதனைக் குறைத்திட கூகுள் நடவடிக்கை எடுக்க உள்ளது. கூடுதலான மக்களை இணைய இணைப்பில், குறிப்பாக, பெண்

களைக் கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது உள்ள பெண்களின் எண்ணிக்கையைப் போல இரு மடங்காக இந்த ஆண்டு உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

2. இணையத்தில் இந்தியப் பதிவுகள் தேவை: வளமான, பல்வேறு கலாச்சாரப் பின்னணியையும், கலை மற்றும் பண்பாட்டு வளத்தினையும், சரித்திரத்தினையும் கொண்டது இந்தியா. ஆனால், அவை குறித்த இணையப் பதிவுகள் மிக மிகக் குறைவாகவே உள்ளன. இதற்கு உதவிட கூகுள் Google Art Project என்ற திட்டத்தினை மேற்கொண்டுள்ளது. ASI என்னும் அமைப்புடன் சேர்ந்து, தாஜ்மஹால் போன்ற, இந்திய நினைவுச் சின்னங்களை டிஜிட்டல் உலகில் உருவாக்கும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது கல்வி கற்கும் சிறுவர்களிடம் அவர்களின் கற்றலில் உறுதுணையாக இருக்கும்.

கூகுள், தற்போது இந்திய மொழிகளுக்கான கீ போர்ட் அமைப்பினை எளிதாக்குவதில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.இந்திய மொழிகளுக்கான உச்சரிப்பினைப் புரிந்து கொண்டு டெக்ஸ்ட்டாக மாற்றும் சாதனங்களையும் உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநில மொழிகளில் எழுத்து வகைகளும் புதிதாக உருவாக்கப்படுகின்றன. இதுவரை பொழுதுபோக்கு தொடர்பான பதிவுகளே, இந்திய இணையத்தில் அதிகம் இருந்த நிலை மாறி வருகிறது. பயனுள்ள தகவல்கள் பதிவது அதிகரித்து வருகிறது.

3. இணையத்தில் இந்திய வர்த்தக நிறுவனங்கள்: இந்தியாவில், இணையத்தில் பதிவு செய்யும் தகுதி கொண்ட பல கோடி வர்த்தக நிறுவனங்கள் இயங்கிய போதும், ஏறத்தாழ ஒரு லட்சம் நிறுவனங்கள் மட்டுமே தங்களுக்கென ஓர் இணையதளத்தினை அமைத்துள்ளன. கூகுள் இதற்கென ஒரு திட்டத்தினைக் கொண்டுவந்தது. தொடக்கத்தில் இலவசமாகவும், பின்னர் கட்டணம் செலுத்தியும் வர்த்தக நிறுவனங்கள் தங்களை இணைய தளத்தில் பதிந்து இயக்கிக் கொள்ளலாம்.இதன் வழியாகத் தற்போது மேலும் 3 லட்சம் வர்த்தக இணைய தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சி இன்னும் தொடர்கிறது.

4. மேலே தரப்பட்டுள்ள அனைத்து முயற்சிகளும், இந்தியாவை முழுமையான டிஜிட்டல் இந்தியாவாக மாற்ற கூகுள் கொண்டுள்ளவையாக உள்ளன. ஒரு கோடி பேர் இணையத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்த நிலையை, பத்து கோடியாக உயர்த்த, முன்பு பத்து ஆண்டுகள் ஆயின. மூன்று ஆண்டுகளில் இது 20 கோடி ஆயிற்றும். இன்னும் இரண்டு ஆண்டுகளில் இதனை 30 கோடியாக உயர்த்த கூகுள் உறுதி கொண்டுள்ளது. இது 50 அல்லது 60 கோடியாக உயரும்போது தான், இந்தியா இணையம் வழியாக முழுப் பயனையும் பெறும்.

இந்த முயற்சிகளில் ஒன்று பெண்களைத் தனிக் கவனத்துடன் இணையத்தில் கொண்டுவருவதாகும். இது இந்தியாவில் தான் முதன் முதலில் செயல்படுத்தப்பட்டு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொழில்நுட்பம்

Client: கம்ப்யூட்டர் நெட்வொர்க்கில் இணைக்கப்பட்டு சர்வராக இயங்காமல் பயன்படுத்தப்படும் எந்த கம்ப்யூட்டரும் கிளையண்ட் என அழைக்கப்படும்.

Doc: இது ஒரு பைலின் பெயரில் உள்ள துணைப் பெயர். இந்த பெயருடன் உள்ள பைல் மைக்ரோசாப்ட் வேர்ட் தொகுப்பில் உருவான பைல் என்பதனை இது குறிக்கிறது.

Domain Name: இன்டர்நெட்டில் உள்ள தகவல் தளங்களை இச் சொல்லால் குறிப்பிடுகின்றனர். அந்த தளத்தின் பெயரை இது குறிக்கிறது.

Download: கம்ப்யூட்டர் ஒன்றிலிருந்து நேரடியாக இன்னொரு கம்ப்யூட்டருக்குப் பைலை மாற்றுவதனை டவுண்லோட் எனக் குறிப்பிடுகிறோம். இருப்பினும் இன்டர்நெட் நெட்வொர்க்கில் இணைந்துள்ள கம்ப்யூட்டரிலிருந்து ஒரு பைல் இறக்கிப் பதியப்படுவதனையே இது பெரும்பாலும் குறிக்கிறது.

விண்டோஸ் 8.1க்கு மாறாதது ஏன்?

விண்டோஸ் 8 சிஸ்டத்துடன் கம்ப்யூட்டர் வாங்கியவர்களுக்கு, விண்டோஸ் 8.1 சிஸ்டத்திற்கான அப்டேட் வசதியை, மைக்ரோசாப்ட் இலவசமாகவே வழங்கி வருகிறது. ஆனால், தற்போது கிடைத்துள்ள புள்ளி விபரங்களின் படி, பலர் இன்னும் விண்டோஸ் 8.1 சிஸ்டத்திற்கு மாறாமலேயே உள்ளனர். இதற்கான காரணங்களை இங்கு காணலாம்.

வாடிக்கையாளர்கள் புதிய சிஸ்டத்திற்கு மாறாதது மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு தோல்வி என்று கூற இயலாது. விண்டோ ஸ் 8.1, சென்ற ஆண்டு அக்டோபர் 17ல் வெளியானது. வரும் மாதத்தில், இதற்கான அப்டேட் பைலாக விண்டோஸ் 8.1 அப்டேட் 1 வெளியாக உள்ளது.

இன்றைய நிலையில், விண்டோஸ் 8 சிஸ்டத்தினைப் பயன்படுத்துபவர்கள் 6.83 சதவீதமாகவும், விண்டோஸ் 8.1 பயன்படுத்துபவர்கள் 4.3 சதவீதமாகவும் உள்ளனர். விண்டோஸ் 8.1 அறிமுகமானவுடன், விண்டோஸ் 8 மறைந்து போகும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. ஆனால், விண்டோஸ் 8.1 பயன்படுத்துவோர் விண்டோஸ் 8 சிஸ்டத்தைப் பயன்படுத்துவோரைக் காட்டிலும் குறைவாகவே உள்ளனர் என்பதுவே சற்று ஆச்சரியமாக உள்ளது. ஏனென்றால், விண்டோஸ் 8 நிறைய பிழையான குறியீடுகளுடன் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ள நிலையில், வாடிக்கையாளர்கள் புதிய சிஸ்டத்திற்கு மாறவில்லை.

விண்டோஸ் ஸ்டோர் - விண்டோஸ் அப்டேட்: இதற்கு முன்பு, விண்டோஸ் சிஸ்டத்திற்கான புதிய பதிப்புகள் வெளியாவது விண்டோஸ் அப்டேட் மூலம் நடை பெற்றது. ஆனால், இப்போது விண்டோஸ் 8.1, விண்டோஸ் ஸ்டோரில் மட்டுமே கிடைக்கிறது. முன்பு புதிய பதிப்புகள் சர்வீஸ் பேக் என அழைக்கப்பட்டன. மற்ற ஆபீஸ் போன்ற தொகுப்புகளுக்கான அப்டேட் பைல்களுடன் இணைந்தே இவையும் வழங்கப்பட்டன. கம்ப்யூட்டர் இணையத்துடன் இணைந்திருக்கையிலேயே, சிஸ்டம் தானாக அப்டேட் செய்யப்பட்டது.

ஆனால், விண்டோஸ் 8.1. சிஸ்டம் இந்த வழியில் தரப்படவில்லை. இது விண்டோஸ் ஸ்டோரின் ஒரு பகுதியாக தரப்பட்டது. ஸ்டோர் அப்ளிகேஷன் ("Store apps") புரோகிராமாக, மெட்ரோ அமைப்பில் தரப்பட்டது. எனவே, தொடு உணர் திரை இல்லாதவர்கள், இந்த அப்ளிகேஷனைப் பார்த்திருக்க வாய்ப்பில்லை.

விண்டோஸ் ஸ்டோர் சென்றால், அது சில டெஸ்க்டாப் அப்ளிகேஷன்களுடன் தொடர்பினைத் தருகிறது. அவை லிங்க்ஸ் மட்டுமே. அதன் மூலம் அப்ளிகேஷன் இன்ஸ்டாலர் புரோகிராமினை டவுண்லோட் செய்து, பின்னர் வழக்கம் போல இன்ஸ்டால் செய்திட வேண்டும். வர இருக்கும் விண்டோஸ் 8.1க்கான அப்டேட் 1 புரோகிராமும் இதே போல் தான் கிடைக்கும். ஏன், இவ்வாறு வேறுபாடான வழிகளில் இவை தரப்படுகின்றன என்பதற்கான காரணம் தெரியவில்லை.

மைக்ரோசாப்ட் அக்கவுண்ட் தேவை: விண்டோஸ் 8 சிஸ்டம், நீங்கள் மைக்ரோசாப்ட் அக்கவுண்ட் அல்லது லோக்கல் யூசர் அக்கவுண்ட்

மூலமாக லாக் இன் செய்திட வேண்டும் எனக் கேட்கும். பெரும்பாலானவர்கள், லோக்கல் யூசர் அக்கவுண்ட் உடன் மட்டுமே லாக் இன் செய்வார்கள். ஆனால், மைக்ரோசாப்ட், விண்டோஸ் 8.1 சிஸ்டம் பைல்களைப் பெற விரும்பும் வாடிக்கையாளர், மைக்ரோசாப்ட் அக்கவுண்ட் மூலமாக மட்டுமே லாக் இன் செய்திட வேண்டும் எனக் கட்டாயப்படுத்துகிறது.

இந்த தேவையைச் சந்திக்க, புதிய யூசர் அக்கவுண்ட் ஒன்றை ஏற்படுத்தி, அதனை மைக்ரோசாப்ட் அக்கவுண்ட்டாகக் காட்டி, அதன் மூலம் விண்டோஸ் 8.1 பைல் டவுண்லோட் செய்த பின்னர், அந்த புதிய யூசர் அக்கவுண்ட்டினை நீக்கிவிடலாம். ஆனால், பலரும் அப்படி செய்வதில்லை. மைக்ரோசாப்ட் நிறுவனமும் தன் வாடிக்கையாளர்கள், மைக்ரோசாப்ட் அக்கவுண்ட் மூலமாகத்தான் லாக் இன் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறது.

பொதுவாகவே, வர்த்தகப் பயன்பாட்டினை மேற்கொள்பவர்கள், புதிய சிஸ்டங்களுக்கு மாறிக் கொள்வதனை, கூடுமானவரையில் தள்ளிப் போடுவார்கள். புதிய மாற்றங்களினால், தங்களுடைய வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு வருமோ என ஒத்தி போடுவார்கள். எடுத்துக் காட்டாக, விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்தினையே தொடர்ந்து பயன்படுத்தப் போவதாக எத்தனை கோடிக்கணக்கான நிறுவனங்கள் அறிவித்து வந்தன. இவற்றில் பல இப்போது தான் விண்டோஸ் 7 சிஸ்டத்திற்கு மாறி வருகின்றன. எனவே, விண்டோஸ் 8 சிஸ்டம் பயன்படுத்தும் வர்த்தக நிறுவனங்கள், விண்டோஸ் 8.1 க்கு மாறாததில் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

மேலும், மைக்ரோசாப்ட் நிறுவனம் இதனை, வழக்கமான முறையில் சர்வீஸ் அப்டேட் ஆகத் தராமல், புதியதொரு சிஸ்டமாகவே தருவதால், மக்கள் தொடர்ந்து விண்டோஸ் 8 சிஸ்டத்திலேயே இருக்கும் முடிவினை எடுத்து வருகின்றனர். எனவே, விண்டோஸ் 8.1 மற்றும் இதன் அப்டேட் பைல்களை, வழக்கம்போல விண்டோஸ் அப்டேட் வழியாக, மைக்ரோசாப்ட் தருமானால், விண்டோஸ் 8 சிஸ்டம் பயன்படுத்தும் அனைவரும் விண்டோஸ் 8.1 சிஸ்டத்திற்கு மாறிக் கொள்வதனை எதிர்பார்க்கலாம்.

விண்டோஸ் 8க்கான பயர்பாக்ஸ் இல்லை

மொஸில்லா நிறுவனம் விண்டோஸ் 8ல் இயங்கக் கூடிய பயர்பாக்ஸ் பிரவுசர் வடிவமைக்கும் திட்டத்தினைக் கைவிட்டது. தொடு உணர் திரை மற்றும் மவுஸ் இயக்கங்களில் இயங்கக் கூடிய இரு வகை செயல்பாட்டினை ஒருங்கே கொண்ட பிரவுசரினைத் தயாரிக்கும் இலக்குடன், இத்திட்டத்தினைத் தொடங்கி, இரண்டு ஆண்டுகளாக மொஸில்லா உழைத்தது. ஆனால், முயற்சியில் வெற்றி அடைய முடியாமல், அதனை முடிவிற்குக் கொண்டு வந்துள்ளது. இது குறித்து பயர்பாக்ஸ் பிரிவின் துணைத் தலைவர் ஜோனாதன் நைட்டிங்கேல் குறிப்பிடுகையில் ''எங்களுடைய பொறியாளர்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டனர். ஆனால், வடிவமைப்பு தொடர்ந்து கவனம் தேவைப்படுவதாகவும், விரிவாக்கம் தேவைப்படுவதாகவும் இருந்ததால், அதனைக் கைவிட வேண்டியதாயிற்று'' என்றார்.

2012ன் பிற்பகுதியில், மொஸில்லா, விண்டோஸ் 8க்கான பயர்பாக்ஸ் திட்டத்தினைத் தொடங்கிய போது, பிரவுசர் உலகில் இது ஒரு பெரிய போட்டிக்கான தளமாக அமைவதாக இருந்தது. இதில் செயல்படுகையில் தான், விண்டோஸ் என்பது மிகப் பெரிய இயக்க முறைமையினைக் கொண்டதாக உணர முடிந்தது. மைக்ரோசாப்ட் எந்த அளவிற்கு இதில் கடுமையாக உழைத்துள்ளது என்பதனையும் அறிய முடிந்தது. தொடக்கத்தில், இதில் நாம் தனிமைப் படுத்தப்படுவோம் என உணர்ந்தோம். பின்னர், மெட்ரோவின் கட்டமைப்பினை அறிந்து அதற்குள் சென்ற போது, பணியாற்றி வெற்றி காணலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. பின்னர், அதன் சோதனைத் தொகுப்பினை வழங்கியபோது, அந்த தொகுப்பினை ஆயிரம் வாடிக்கையாளர்கள் கூடப் பயன்படுத்த வில்லை என உணர்ந்தோம்.

இதற்கு முன்னர் மொஸில்லா எப்போது பயர்பாக்ஸ் பிரவுசரின் சோதனைப் பதிப்புகளை வெளியிட்ட போதும், ஏறத்தாழ பத்து லட்சம் பேர் அவற்றைப் பயன்படுத்தி, பயனுள்ள பின்னூட்டங்களைத் தந்து வந்தனர். எனவே, குறைவான பின்னூட்டங்கள் அடிப்படையில், முழுமையான இயக்கத்தினைத் தரும் பிரவுசரினைத் தரக் கூடாது என்ற முடிவில் இதனை முடிவிற்குக் கொண்டு வருகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செய்தி பயர்பாக்ஸ் பிரியர்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாகவே அமைந்துள்ளது. தொடு உணர் திரையில் இயங்கும் பிரவுசர் எனில், இனி இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 11 மட்டுமே செயல்பாட்டிற்குக் கிடைக்கும் என்றாகிவிட்டது.



எக்ஸெல் டிப்ஸ்

காப்பி – பேஸ்ட்

எக்ஸெல் தொகுப்பில் தகவல்களை பேஸ்ட் செய்திட கண்ட்ரோல்+வி அல்லது பேஸ்ட் பட்டனைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. ஒரு செல்லில் உள்ள தகவல்களை கண்ட்ரோல்+சி கொடுத்து காப்பி செய்திடுங்கள். பின் எந்த செல்லில் அவற்றை பேஸ்ட் செய்திட வேண்டுமோ அந்த செல்லில் கர்சரைக் கொண்டு செல்லுங்கள். பின் ஜஸ்ட் என்டர் தட்டுங்கள். ஆஹா! பேஸ்ட் ஆகிவிட்டதா உங்கள் தகவல்கள்.

வாட்ச் விண்டோ

பார்முலாக்களைப் பயன்படுத்துவது எக்ஸெல் ஸ்ப்ரெட் ஷீட்டில் ஓர் அத்தியாவசிய செயல்பாடாகும். பார்முலாக்கள் அதிகமாகும் போது எந்த பார்முலா, எந்த செல்களையெல்லாம் இயக்கும் என்பதனைப் பல வேளைகளில் நம் நினைவில் வைத்துக் கொள்ள இயலாமல் போய்விடும். சில வேளைகளில் செல்களில் மதிப்புகளைத் தருகையில் இந்த பார்முலாக்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் கணக்குகளை மேற்கொண்டு முடிவுகளை செல்களில் அமைக்கும்படி ஏற்பாடு செய்திருப்போம். இதனால் புதிய பார்முலாக்கள் அமைக்கையில் அவை தொடர்பு டைய செல்களில் சரியாகச் செயலாற்றி விடைகளைத் தருகிறதா என்பதைக் கண் காணிக்க பல இடங்களில் உள்ள செல்களுக்குச் சென்று பார்க்க வேண்டியதிருக்கும். சில நேரங்களில் தவறான செல்களைப் பார்த்து தவறான தகவல்கள் மற்றும் பார்முலாக்களைத் தரும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு. இவற்றைத் தவிர்க்க எக்ஸெல் தொகுப்பு தரும் வசதி தான் எக்ஸெல் வாட்ச் விண்டோ.

அடுத்தடுத்து எக்ஸெல் பார்முலாக்கள் கணக்கிடு வதனைக் கண்காணிக்க நமக்குக் கிடைத்திருக்கும் வசதிதான் வாட்ச் விண்டோ. நாம் செல்களின் மதிப்பை மாற்றும்போதெல்லாம் சம்பந்தப்பட்ட செல்களில் என்ன மாறுதல்கள் ஏற்படுகிறது என்று நமக்குக் காட்டும் ஜன்னல் தான் இந்த வாட்ச் விண்டோ. இதனால் நாம் ஒவ்வொரு செல்லுக்கும் தாவிச் சென்று கண்காணிக்கும் வேலை மிச்சமாகிறது. இந்த வாட்ச் விண்டோவினை அமைத்திட முதலில் Tools மெனு சென்று அதில் துணை மெனுவான Formula Auditing என்பதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின் அதில் உள்ள Show Watch Window என்பதனைக் கிளிக் செய்திட வேண்டும். Formula Auditing விண்டோவில் கண் கண்ணாடி படத்துடன் உள்ள சிறிய பிரிவுதான் Watch Window. இதனை கிளிக் செய்தவுடன் நமக்கு வாட்ச் விண்டோ கிடைக்கும். இப்போது எந்த செல்லில் உள்ள பார்முலா செயல்படுவதனைக் கவனிக்க விரும்புகிறீர்களோ அதனைத் தேர்ந்தெடுத்து Add Watch என்னும் பட்டனை அழுத்த வேண்டும். இப்போது வாட்ச் விண்டோவில் பார்முலா சம்பந்தப்பட்ட செல்கள் அவற்றின் மதிப்பு, கணக்கிடப்பட்ட விடை ஆகியவை தெரியும். இதே போல எந்த பார்முலாக்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க விரும்புகிறீர்களோ அவற்றை வரிசையாகத் தேர்ந்தெடுத்து Add பட்டனை அழுத்தினால் அவை அனைத்தும் Watch விண்டோவில் சேர்க்கப்படும். இந்த விண்டோனை மானிட்டரின் எந்த மூலையிலும் வைத்துக் கொள்ளலாம். இனி செல்களில் மதிப்புகளை மாற்றும் போதெல்லாம் இந்த பார்முலாக்கள் மூலம் எந்த செல்களில் மதிப்புகள் மாறுகின்றன என்று இந்த ஒரே விண்டோவில் கண்காணிக்கலாம். ஏதாவது ஒரு பார்முலா செயல்படுவதனைக் கண்காணிக்க விரும்பவில்லை என்றால் அதனை மட்டும் தேர்ந்தெடுத்து Delete Watch button ஐ அழுத்தி நீக்கிவிட்டு மற்ற பார்முலாக்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்கலாம். ஒவ்வொரு செல்லுக்காய் மவுஸ் மூலம் ஓடி ஓடிப் பார்ப்பதனைத் தவிர்த்து ஒரே ஜன்னலில் அனைத்தையும் கண் காணிப்பது எவ்வளவு எளிது பாருங்கள்.

பேஸ்ட் பட்டன்

எக்ஸெல் 2003க்குப் பின் வந்த தொகுப்பில் பணியாற்றும் பலரும் இதனை அறிந்திருக்க மாட்டார்கள். அத்தொகுப்பில் தரப்பட்டிருக்கும் பேஸ்ட் பட்டன் வழக்கமான பட்டனாக இல்லாமல் மேலும் சில வசதிகள் கொண்டதாக இருப்பதைக் காணலாம். அதிலுள்ள சிறிய அம்புக் குறியினை அழுத்தினால் எக்ஸெல் உங்களுக்காக மேலும் சில வேலைகளை மேற்கொள்ள தயாராக இருப்பதனைக் காணலாம். இதில் பேஸ்ட் ஸ்பெஷல் பட்டன் ஒன்றும் இருக்கும். அதனை அழுத்தினால் பேஸ்ட்செய்வதில் மேலும் சில கூடுதல் வசதிகளைத் தரும் பிரிவுகள் காணப்படலாம். எனவே நீங்கள் தேர்ந்தெடுத்த செல்லில் இருந்து பார்முலா வேண்டுமா, வேல்யூ வேண்டுமா, செல் டேட்டா மட்டும் வேண்டுமா, செல் பார்மட்டோடு காப்பி செய்யப்பட வேண்டுமா, யூனிகோட் டெக்ஸ்ட்டில் டெக்ஸ்ட் அமைக்கப்பட வேண்டுமா எனப் பல பிரிவுகள் இங்கு உங்கள் தேவைக்குத் தரப்பட்டிருக்கும். உங்கள் தேவைக்கேற்ற பிரிவைத் தேர்ந்தெடுத்து இயக்கவும்.

நோக்கியா எக்ஸ் - 10 லட்சம் போன் முன் பதிவு

சென்ற மாதம் பார்சிலோனாவில் நடைபெற்ற அகில உலக மொபைல் போன் கருத்தரங்கு மற்றும் கண்காட்சியில், நோக்கியாவின் புதிய ஆண்ட்ராய்ட் மொபைல் போன் பலத்த எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியது. மலேசியா, இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் விற்பனைக்கு அறிமுகமானது. பின்னர் இது குறித்த அறிவிப்பு சீனாவில் வெளியானது. இதற்கு அங்கு பலத்த வரவேற்பு கிடைத்துள்ளது. விற்பனைக்கு அறிமுகமாகும் முன்பாகவே, பத்து லட்சம் போன் கேட்டு மக்கள் முன்பதிவு செய்துள்ளனர்.

தன் மொபைல் போன் விற்பனையில், 2011 ஆண்டு முதல் பலத்த சரிவை நோக்கியா சந்தித்து வந்தது. தற்போதுதான், அதன் பின்னர் முதல் முதலாக, தன் போன்களுக்கு அமோக வரவேற்பினையும் விற்பனையையும் பெற்றுள்ளது. கூகுள் சேவை கிடைக்காத சீனாவில், நோக்கியா தற்போது பிரபலமாகி

வருகிறது. நோக்கியா எக்ஸ் மொபைல் போனில் ஆண்ட்ராய்ட் அப்ளிகேஷன்கள் அனைத்தையும் இயக்கலாம். ஆனால், கூகுள் சேவையுடன் இணைந்த அப்ளிகேஷன்கள் எதனையும் சீனாவில் இயக்க முடியாது. அவற்றிற்கு இணையான அப்ளிகேஷன்களை நோக்கியா ஸ்டோரில் இருந்து தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். சீனாவில் இது தொடக்க விலை போனாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

நோக்கியாவின் எக்ஸ் வரிசை போன்கள்

இந்தியாவில் ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட் போன்களுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதால், நோக்கியா தன் எக்ஸ் வரிசையில் பல ஸ்மார்ட் போன்களை இந்தியாவில் விற்பனைக்குக் கொண்டு வருகிறது. இந்த போன்களை, இந்திய வாடிக்கையாளர்களுக்குக் கட்டுப்படியாகும் விலையில் தர முடியும் என நோக்கியா கருதுகிறது. எனவே தான், தன் முதல் எக்ஸ் வரிசை போன், நோக்கியா எக்ஸ் வெளியானதைத் தொடர்ந்து, தன் அடுத்த X+ மற்றும் XL மாடல் போன்களையும் இந்தியாவிற்குக் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டுகிறது. வரும் ஜூன் மாதத்திற்குள், இவை இந்திய மொபைல் சந்தையில் இடம் பெறும் வாய்ப்புகள் உள்ளன.

இன்னும் இவற்றிற்கான விலை விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை. தற்போதைய ஈரோ விலை அடிப்படையில் கணக்கிட்டால், இவை முறையே ரூ.8,420 மற்றும் ரூ.9,270 என அமையலாம். ஆனால், நோக்கியா எக்ஸ் மொபைல் போனின் விலை ரூ.8,599 ஆக இருப்பதால், மேலே குறிப்பிட்ட விலைக்கு இங்கு அறிமுகமாவது சந்தேகமாக உள்ளது. நிச்சயம் சற்று கூடுதலாகவே விலை நிர்ணயம் செய்யப்படலாம்.

இந்த இரண்டு போன்களின் அம்சங்களை இங்கு காணலாம்.

நோக்கியா எக்ஸ் ப்ளஸ்

4 அங்குல WVGA IPS LCD டச் ஸ்கிரீன், நோக்கியா எக்ஸ் சாப்ட்வேர், 1 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்கும் டூயல் கோர் ப்ராசசர், 3 எம்.பி. கேமரா, 768 எம்.பி. ராம் மெமரி, 32 ஜி.பி. வரை அதிகப்படுத்தக் கூடிய 4 ஜி.பி. ஸ்டோரேஜ் மெமரி மற்றும் 1,500 mAh திறன் கொண்ட பேட்டரி.

நோக்கியா எக்ஸ்.எல்

5 அங்குல WVGA IPS LCD டச் ஸ்கிரீன், நோக்கியா எக்ஸ் சாப்ட்வேர், 1 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்கும் டூயல் கோர் ப்ராசசர், 5 எம்.பி. கேமரா, 2 எம்.பி. வெப் கேமரா, 768 எம்.பி. ராம் மெமரி, 32 ஜி.பி. வரை அதிகப்படுத்தக் கூடிய 4 ஜி.பி. ஸ்டோரேஜ் மெமரி மற்றும் 2,000 mAh திறன் கொண்ட பேட்டரி.

மொபைல் இன்டர்நெட் பயனாளர்களை இலக்கு வைக்கும் யூனிநார்

தன் 2ஜி மொபைல் இணைய சேவை வர்த்தகத்தினை இரு மடங்காக இந்த ஆண்டில் உயர்த்த யூனிநார் நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்கென மிகக் குறைந்த கட்டணத்திலும், வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்திடும் வகையிலும் பல கட்டணத் திட்டங் களை வெளியிட்டுள்ளது.

முதல் முதலாக, மொபைல் போன் வழி இன்டர்நெட் பயன்படுத்துபவர்களையும், மாணவர்களையும், இளைஞர்களையும் இந்த திட்டங்கள் மூலம் வளைத்துப் போட முயற்சிக்கிறது. ஒரு மணி நேர அளவில்லா பயன்பாட்டிற்கு 50 பைசா, சமூக இணைய தளங்களை மட்டும் பிரவுஸ் செய்து பயன்படுத்த மாதம் ஒன்றுக்கு ரூ.15 என்றெல்லாம் திட்டங்கள் தரப்பட்டுள்ளன. நாள் ஒன்றுக்கு ரூ.1 செலுத்தி பேஸ்புக் மற்றும் வாட்ஸ் அப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

யூனிநார் தற்போது, ஆறு தொலை தொடர்பு மண்டலங்களில், 3 கோடியே 40 லட்சம் சந்தாதாரர்களுடன் இயங்கி வருகிறது. இவர்களில் 80 லட்சம் பேர் இணையப் பயனாளர்கள். தற்போது அறிமுகப்படுத்தப் பட்டுள்ள குறைந்த கட்டணத் திட்டங்கள் மூலம் இன்னும் பலர் புதியதாகவும், ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களும், மொபைல் வழி இணையத்தைப் பயன்படுத்தத் தொடங்குவார்கள் என யூனிநார் எதிர் பார்க்கிறது.

டேட்டாவிற்கு அளவு வைத்தே பல நிறுவனங்கள் இணைய திட்டங்களைத் தந்து வருகின்றன. அவ்வாறு இல்லாமல், எந்த டேட்டா வரையறையும் இன்றி, குறிப்பிட்ட காலம் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலான திட்டங்கள், இணையத்தை அதிகம் பயன்படுத்துவோருக்கு இலாபகரமாய் இருக்கும். குறிப்பாக டெக்ஸ்ட் மெசேஜ் மற்றும் சேட் பயன்பாடுகளை அதிகம் மேற்கொள்வோருக்கு இவை மிகவும் பயன்படும்.

இது போன்ற திட்டங்கள், தற்போது எஸ்.எம்.எஸ். மூலம் நிறுவனம் பெறும் வருமானத்தைப் பாதிக்காதா? என்ற கேள்விக்கு, வாடிக்கையாளர்கள் எதனை விரும்புகிறார்களோ அதனைக் குறைந்த கட்டணத்தில் தருவது எங்கள் நோக்கமாகும் என்று இந்நிறுவன உயர் அதிகாரி தெரிவித்தார்.

இந்நிறுவனத்தின் எதிர்கால விரிவாக்கத் திட்டங்கள் குறித்து கேட்டபோது, ரூ.600 கோடி திட்ட மதிப்பிட்டில், யூனிநார் நிறுவனத்தின் நெட்வொர்க் வலுப்படுத்தப்படும் என்றும், கூடுதலாக 5,000 மொபைல் கோபுரங்கள் நிறுவப்படும் என்றும் தெரிவித்தார்.



PERSONAL BREAK

ஆண்ட்ராய்ட் மற்றும் குரோம் சிஸ்டம் குறித்த விளக்கம் மிக அருமை.

கே.மங்கையர்க்கரசி, தாம்பரம்.

கண்ட்ரோல் கட்டளைகள் வேர்ட் தொகுப்பிற்குக் கொடுத்தது போல, மற்றவற்றிற்கும் கொடுக்கவும். அதே போல ஷிப்ட் கீயுடன் இணைந்த வேலைகளுக்கும் விளக்கம் தரவும்.

டி.அகல்யா, புதுக்கோட்டை.

இனி ஸ்மார்ட் போன்களே தொடக்க நிலை போன்களாக நிச்சயம் அமைந்துவிடும். மக்களுக்கிடையே தொடர்பு டெக்ஸ்ட் மெசேஜ், வாய்ஸ் மெசேஜ் என மாறிவிடும். மொபைல் போன் அழைப்புகள் வெகுவாகக் குறைந்து விடும்.

என். வாசகம், மதுரை.

தகவல் தொடர்பும், கருத்துக் களை பரிமாறிக் கொள்வதும் ஒருவரின் தாய் மொழியில் இருப் பதுவே, அதனைச் சரியாக எடுத்துச் செல்லும். ஆங்கிலத்தோடு நம் வாழ்க்கையில் நுழைந்த கம்ப்யூட்டரும், இணையமும், தற்போது நம் மொழிகளில் இயங்க முனைவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாக உள்ளது. அதே நேரத்தில், ஆங்கில மொழிப் பயன்பாட்டினையும் விட்டு விடக் கூடாது. தங்கள் கட்டுரைக்கு என் பாராட்டுதல்கள்.

பேரா . டாக்டர் கே. சாலமன் ராஜ், மதுரை.

நம் மொழிகளில் இணையப் பயன்பாடு கிடைப் பது, கிராமப் புற மக்களுக்கு, வரப்பிரசாதமாக அமையும். அவர்களின் வாழ்க்கையிலும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி வளமாக்கும். இன்றைய உலகில் இதுவே தவிர்க்க முடியாத நிலையாகும். தாங்கள் தந்துள்ள தகவல்கள் மனதிற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன.

டாக்டர் எஸ்.இலக்குமி, பேராசிரியை, காரைக்குடி.

ஐந்து டெரா பைட் அளவில் ஒரு ட்ரைவ்! நம் ஸ்டோரேஜ் உலகம் எங்கோ சென்று கொண்டி ருக்கிறது. தகவலுக்கு நன்றி.

என். ஸ்வர்ணா ராமன், சென்னை.

பிறர் அறியா பிரவுசிங் என்பது தவறான வழி அல்ல; அதுவும் சில வேளைகளில் நமக்குத் தேவைப்படுகிறது என்பதனை மிக அழகாக விளக்கியுள்ளீர்கள். பாராட்டுக்கள்.

கே. ராம்குமார், பொள்ளாச்சி.

நீங்கள் குறிப்பிட்டிருப்பது போல பேஸ்புக் இமெயில் ஒன்றைக் கொண்டிருப்பது என்பதே தெரியாமல் தான் இருக்கிறோம். ஏனென்றால், அனைத்து இமெயில் சேவைகளுக்கும் மேலாக, நம் தோள்களில் ஜிமெயில் அமர்ந்துள்ளதே. பேஸ்புக் சேவை பாராட்டக் கூடியதே என்றாலும், ஏன் அந்த சேவையை மூடுகிறது என்பதற்கான காரணம் சரியில்லை.

ஆர். ஜெபராஜ், விருதுநகர்.

இன்றைக்கு உலகையும், நம்மையும் ஆளும் இணையம் எப்படி தொடங்கப்பட்டது என்பதை அறிய வேடிக்கையாக உள்ளது. உலகம் அலட் சியப் படுத்திய ஒன்று, இன்று தான் மட்டுமே பெரிய சக்தி என்று நிரூபித்துள்ளது. டிம் பெர் னர்ஸ் லீ தான் உண்மையிலேயே பெரிய சாத னையாளர்.

ஆ. கண்ணன், ஸ்ரீரங்கம்.

கூகுள் தேடல்களை எப்படி ட்ரிம் செய்து தேடு வது என்று நீங்கள் அளித்துள்ள தகவல்கள் மிக வும் பயனுள்ளவை. இன்னும் தொடர்ந்து இது போன்ற டிப்ஸ்களைத் தருமாறு கேட்டுக் கொள் கிறேன்.

என். கோகிலம், புதுச்சேரி.

இத்தனை வகையான வசதியான தேடல்கள் உள்ளனவா என்று வியக்கும் அளவிற்கு கூகுள் தேடல்களுக்கான டிப்ஸ்களைத் தந்துள்ளீர்கள். ஒவ்வொன்றையும் பயன்படுத்தி பார்த்து, அவற் றின் விரைவுத் தன்மையைப் புரிந்து கொண் டேன். நன்றி. நன்றி.

செ. உத்தமன், மதுரை.

இந்த இதழில் குட்டிக் கட்டங்களில் தந்துள்ள தகவல்கள் எல்லாமே, புதுமையாகவும், புதிய வாகவும் இருக்கின்றன. குறிப்பாக பிட் பக்கெட், பிட் நிப்ளர் குறித்த தகவல் வியப்பாக இருந்தது. தொடர்ந்து இதே போல தரவும்.

எஸ். சிரஞ்சீவி குமார், சென்னை.

கேள்வி - பதில்

கேள்வி: விண்டோஸ் சிஸ்டத்திலான போன்களை நோக்கியா தவிர வேறு எந்த நிறுவனங்கள் தயாரித்து வழங்குகின்றன? சாதாரண மானவர்கள் வாங்கும் விலையில் எவை விற்பனை செய்கின்றன?

எம். நல்லசிவம், பொள்ளாச்சி.

பதில்: வரும் மாதங்களில், இந்திய நிறுவனங்களான லாவா மற்றும் கார்பன் (Karbonn, Lava) நிறுவனங்கள், விண்டோஸ் இயக்கத்தில் செயல்படும் ஸ்மார்ட் போன்களை விற்பனைக்கு வெளியிட இருப்பதாகத் தகவல்கள் வந்துள்ளன. இவற்றின் விலை, நீங்கள் விரும்புவது போல, ரூ.6,000 முதல் ரூ. 12,000 வரை என்ற அளவில் இருக்கலாம். லாவா நிறுவனத்தின் போன் தொடக்க நிலையில் ரூ.6,500 என அறிவிக்கப்பட்டுள்ளது. கார்பன் நிறுவனம் வரும் மே மற்றும் ஜூன் மாதங்களில் நான்கு விண்டோஸ் மாடல் போன்களை வழங்க இருக்கிறது. அதே போல லாவா நிறுவனமும் பல மாடல்களைக் கொண்டு வருகிறது. சென்ற மாதம் நடைபெற்ற உலக மொபைல் போன் கருத்தரங்கில், விண்டோஸ் போன்களைத் தயாரித்து வழங்கிட Foxconn, Gionee, JSR, Karbonn, Lava (Xolo), Lenovo, LG, Longcheer மற்றும் ZTE ஆகிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதாக மைக்ரோசாப்ட் அறிவித்தது.

ஏற்கனவே HTC, Huawei, Nokia மற்றும் Samsung ஆகிய நிறுவனங்கள், விண்டோஸ் இயக்கத்தில் இயங்கும் மொபைல் போன்களை தயாரித்து விற்பனை செய்து வருகின்றன.

ஐ.டி.சி. அமைப்பின் கணக்கின்படி, சென்ற 2013 ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில், ஆண்ட்ராய்ட் சிஸ்டம் கொண்ட போன்களின் பங்கு 78.1 சதவீதமாகவும், விண்டோஸ் இயக்க போன்களின் பங்கு 3 சதவீதமாகவும் இருந்தது. இந்த ஆண்டில் விண்டோஸ் போன்களின் பங்கு உயரும் வாய்ப்புகள் இருக்கின்றன.

கேள்வி: பேஸ்புக்கில் உள்ள நம் தகவல்களை எப்படி நாம் டவுண்லோட் செய்து வைத்துக் கொள்ளலாம்?

சி.காஞ்சனா, கோவை.

பதில்: பேஸ்புக்கில் உங்கள் அக்கவுண்ட்டில் பதியப்பட்டுள்ள டேட்டாவினை டவுண்லோட் செய்து வைப்பதற்கு எளிய வழிகள் உள்ளன. வீடியோ மற்றும் படங்கள் உட்பட அனைத்தையும் டவுண்லோட் செய்திடலாம். இது ஒரு பாதுகாப்பிற்குத்தான். ஏனென்றால், நம் பேஸ்புக் பக்கத்தை யாராவது உள்ளே நுழைந்து முழுமையாக வீணடித்துவிட்டால், நமக்கு ஒரு நகலாக இது இருக்கும் அல்லவா! இதோ அதற்கான வழிகள்.

1. உங்கள் பேஸ்புக் அக்கவுண்ட்டினைத் திறக்கவும். பின்னர் Settings செல்லவும்.

2.இங்கு திரையின் கீழாகச் சென்று, "Download A Copy Of Your Facebook Data." என்பதில் கிளிக் செய்திடவும்.

3. இதனைத் தொடர்ந்து "Download Your Information." என்ற இடத்திற்கு நீங்கள் எடுத்துச் செல்லப்படுவீர்கள்.

4. இதில் "Start My Archive" என்பதில் கிளிக் செய்திடவும். டவுண்லோட் செயல்பாடு மேற்கொள்ளப்படுமுன், உங்களின் பாஸ்வேர்ட்



கேட்கப்படும். சரியாக எண்டர் செய்திடவும். டவுண்லோட் செய்திட சற்று நேரம் ஆகும் என்ற செய்தி உங்களுக்குக் காட்டப்படும்.

5. டவுண்லோட் முடிந்தவுடன், பேஸ்புக் உங்களுக்கு டேட்டாவுடன் இமெயில் ஒன்றை அனுப்பும். அதில் தரப்படும் லிங்க்கில் கிளிக் செய்திடவும்.

6. மீண்டும் அந்த பக்கத்திற்கு செல்வீர்கள். இங்கு "Download Archive" என்பதில் கிளிக் செய்திடவும். உங்களுக்கான பைல் உங்கள் கம்ப்யூட்டரில் அமர்ந்து கொள்ளும். உங்கள் பேஸ்புக் அக்கவுண்ட்டில் பல பிரிவுகளைத் தனித்தனியே காண பல ஆப்ஷன்கள் அங்கு தரப்படும். இந்த டேட்டா அடங்கிய பைலை சேவ் செய்து வைக்கவும். அவ்வப்போது, பேஸ்புக்கில் தொடர்ந்து டேட்டாவினை அமைக்கையில், அப்டேட் செய்து வைத்துக் கொள்ளவும்.

தொழில்நுட்பம்

Firewall: நெட்வொர்க் (இன்டர்நெட் உட்பட) கில் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு கம்ப்யூட்டரில் உள்ளே அனுமதியின்றி வரும் அடுத்தவரின் முயற்சியைத் தடுக்கும் ஒரு சாப்ட்வேர் அல்லது சிறிய ஹார்ட்வேர் சாதனம்.

Internet Telephony: வழக்கமான டெலிபோன் இணைப்பில்லாமல் இன்டர்நெட் மூலம் தொலைபேசி தொடர்பு கொண்டு பேசும் முறைக்கு இந்த பெயர்.

Mother Board: (மதர் போர்டு)பெர்சனல் கம்ப்யூட்டரில் இருக்கும் எலக்ட்ரானிக் சர்க்யூட் போர்டு. இதன் மூலம் தான் கம்ப்யூட்டரின் அனைத்து பாகங்களும் (மானிட்டர், கீ போர்டு, மவுஸ், பிரிண்டர் போன்றவை) இணைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படுகின்றன.

கேள்வி: என் வர்த்தக காரணங்களுக்காக பலருடன் ஜிமெயில் அக்கவுண்ட்டில் தொடர்பு கொண்டதில், பலரின் ஜிமெயில் முகவரிகள் குவிந்துள்ளன. இவற்றில் தொடர்பு இல்லாதவர்களின் முகவரிகளை நீக்குவது எப்படி?

என்.முருகதாஸ் ராவ், கோவை.

பதில்: பலரும் தொடர்ந்து ஜிமெயில் அக்கவுண்ட்டினைப் பயன்படுத்துவதால், இது போல நம் அட்ரஸ் புக்கில் நிறைய முகவரிகள் சேரும். ஆனால், அவற்றை ஏன் நீக்க விரும்பு கிறீர்கள் என்று தெரியவில்லை. இருப்பினும் இவற்றை நீக்குவதும் எளிதுதான். இதோ அந்த வழி.

முதலில், உங்கள் ஜிமெயில் அக்கவுண்ட் பக்கம் செல்லவும். இங்கு, இன்பாக்ஸிலிருந்து, காண்டாக்ட் லிஸ்ட்டுக்கு மாறவும். மாற்றிக் கொள்ள உங்கள் திரையின் இடது பக்கம் உள்ள GMAIL என்பதன் அருகே உள்ள கீழ் விரி அம்புக் குறியில் கிளிக் செய்திடவும். இங்கு கிடைக்கும் முகவரிகளுக்கான பட்டியலில் பெயர்கள் அருகே, செக் பாக்ஸ் ஒன்று இருப்பதனைப் பார்க்கலாம். இவற்றில் எவற்றையெல்லாம் நீக்க வேண்டுமோ, அவற்றின் அருகே உள்ள செக் பாக்ஸில் டிக் அடையாளம் ஒன்றை ஏற்படுத்தவும். அடுத்து, காண்டாக்ஸ் பட்டியலின்



மேலாகப் பார்த்தால், அங்கு சில ஆப்ஷன்கள் தரப்பட்டிருப்பதனைப் பார்க்கலாம். இதில் DELETE CONTACT என்கிற ஆப்ஷன் இருப்பதையும் காணலாம். இதில் கிளிக் செய்தால், டிக் செய்த அனைத்து முகவரிகளும் நீக்கப்படும்.

கேள்வி: விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்தி வருகிறேன், பல ஆண்டுகளாக. பல பத்திரிக்கைகளில், குறிப்பாக கம்ப்யூட்டர் மலரில், தரப்பட்டுள்ள எச்சரிக்கைக் குறிப்புகளின் அடிப்படையில், விண்டோஸ் 7 சிஸ்டத்திற்கு மாற இருக்கிறேன். இதில் இயங்குவது முற்றிலும் மாறாக இருக்குமா?

என். நசீர் அகமது, திண்டுக்கல்.

பதில்: நல்ல முடிவு எடுத்துள்ளீர்கள். எக்ஸ்

பிக்கும், விண்டோஸ் 7 சிஸ்டத்திற்கும் பெருத்த வேறுபாடுகள் இல்லை. மேம்பாடு கொண்ட சில வசதிகள் உண்டு. இதே மலரில் உள்ள இது குறித்த கட்டுரையைப் பார்க்கவும். மேலும் பல குறிப்புகளைத் தொடர்ந்து வரும் வாரங்களில், கட்டுரைகளாகத் தருகிறேன்.

கேள்வி: விண்டோஸ் 7 சிஸ்டத்தில் கிடைக்கும் ரன் விண்டோவில், பெயிண்ட் புரோகிராம் கிடைக்க என Paint டைப் செய்திடாமல், MSpaint என டைப் செய்திட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். இதே போல வேறுபாடுள்ள மற்ற புரோகிராம்கள் குறித்தும், அவற்றினை எந்த சொல் கொண்டு டைப் செய்திட வேண்டும் எனத் தெரிவிக்கவும்.

ஜே. எஸ். நிர்மலா, திருப்பூர்.

பதில்: அந்தக் குறிப்பிலேயே மற்றவற்றையும் கொடுத்திருந்தேனே. இதோ, மீண்டும் தருகிறேன்.

Calculator: calc
Character Map: charmap
Control Panel: control
Notepad: notepad
Paint: mspaint
Resource Monitor: perfmon /res
System Configuration: msconfig
Sticky Notes: stikynot
System Information: msinfo32

கேள்வி: நான் ஏர்டெல் மொபைல் சேவையினைப் பயன்படுத்துகிறேன். மூன்று போன்களில் இந்நிறுவனத்தின் நான்கு எண்களைப் பயன்படுத்துகிறேன். எதில் எந்த எண் உள்ளது என்று நினைவில் வைத்துக் கொள்ள இயலவில்லை. போனே தன் எண்ணைக் காட்டும் வகையில் அமைக்க என்ன செய்திட வேண்டும்?

எஸ். ஜெயராஜ், மதுரை.

*பதில்: நல்ல கேள்வி. உங்களின் மொபைல் சேவை ஏர்டெல் என்பதால், எந்த போனில் உள்ள சிம்மின் எண் தெரிய வேண்டுமோ, அதில் *121-*9# என டைப் செய்து அழுத்த, உங்கள் சிம் எண், மெசேஜ் ஆக உங்களுக்குக் கிடைக்கும்.*

கேள்வி: எனக்கு விண்டோஸ் 8.1 சிஸ்டம் உள்ள லேப்டாப் கம்ப்யூட்டர் ஒன்றை என் மகள் தந்துள்ளார். நான் விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்தினை என் பெர்சனல் கம்ப்யூட்டரில் பயன்படுத்தி வந்தேன். புதிய லேப்டாப் கம்ப்யூட்டரில் எப்படி சிஸ்டம் ஷட் டவுண் செய்திட வேண்டும்?

எஸ்.பத்மநாபன், தஞ்சாவூர்.

பதில்: உங்கள் மகள் வெளிநாட்டிலிருந்து லேப்டாப் வாங்கித் தந்ததாக எழுதி உள்ளீர்கள். உங்கள் இருவருக்கும் பாராட்டுக்கள் -- புதிய சிஸ்டத்தில் கம்ப்யூட்டர் செயல்பாடுகளை மேற்கொள்ளும் துணிவிற்காக. நீங்கள் குறிப்பிட்டுள்ள குழப்பம், விண்டோஸ் 8 மற்றும் விண்டோஸ் 8.1 சிஸ்டம் கொண்டவர்கள் அனைவருக்கும் தொடக்கத்தில் கிடைக்கும். கவலைப் பட வேண்டாம்.

விண்டோஸ் 8 மற்றும் 8.1ல், ஷட் டவுண் செய்வதற்கான எளிய வழி, ஸ்டார்ட் பட்டனைப் பயன்படுத்துவது தான். ஸ்டார்ட் பட்டனில் ரைட் கிளிக் செய்திடவும். இதில் கிடைக்கும் பாப் அப் மெனுவில், பல கட்டளைகளும், செயல்பாட்டு வசதிகளும் பட்டியலிடப்படும். இங்கு Shut down அல்லது sign out செய்திடலாம். தொடர்ந்து ஒரு சப் மெனு கிடைக்கும். இதில் Sign out, Sleep, Shut down, மற்றும் Restart ஆகிய ஆப்ஷன்கள் கிடைக்கும். Shut down என்பதில் கிளிக் செய்தால், சிஸ்டம் பவர் ஆப் ஆகும்.

இவற்றுடன், விண்டோஸ் 8 சிஸ்டத்தில் தந்த வழிகளையும் கையாளலாம். இதில் சார்ம்ஸ் பார் இயக்கவும். கிடைக்கும் திரையில், Settings தேர்ந்தெடுத்து, பின்னர் அதில் உள்ள Power ஐகானைத் தேர்ந்தெடுக்கவும். இதில் மூன்று ஆப்ஷன்கள், Sleep, Shut down, மற்றும் Restart, கிடைக்கும். இதில் Shut down என்பதில் கிளிக் செய்திட, சிஸ்டம் மூடப்படும்.

தொழில்நுட்பம்

Hardware: (ஹார்ட் வேர்) கம்ப்யூட்டர் சார்ந்த அனைத்து சாதனங்களும் இந்த சொல்லால் குறிப்பிடப்படுகின்றன. மதர்போர்டு, சிப், மவுஸ், கீ போர்டு, பிரிண்டர், மோடம், ரௌட்டர் என அனைத்தும் இந்த சொல்லில் அடங்கும்.

Software: (சாப்ட்வேர்) ஹார்ட்வேர் எனக் கூறப்படும் சாதனங்களை இயக்கும் கம்ப்யூட்டர் புரோகிராம்கள் அல்லது புரோகிராம்களின் தொகுப்பு என இதனைக் கூறலாம். ஆப்பரேட்டிங் சிஸ்டம் புரோகிராம், சாப்ட்வேர் அப்ளிகேஷன்கள் (எம்.எஸ். ஆபீஸ், கேம்ஸ் போன்றவை) ஆகிய அனைத்தும் இந்த சொல்லால் குறிப்பிடப்படும்.